**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

CC.No.85/2018

Date. 05.03.2026

பெயர்: அஞ்சலிதேவி

த/பெ.

வழக்கு சாட்சி. அ.சா.1

(மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)

**குறுக்கு விசாரணை**

1. நான்கு நபர்கள் கையால் தாக்கியதாகதான் மருத்துவரிடம் நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து பவானி அரசு மருத்துவமனை சுமார் இரண்டு கிலோ மீட்டர் துரத்தில் இருக்குமா என்றால் இருக்கும். குடோன் சம்பந்தமாக நடைபெற்ற சிவில் வழக்கில் கலைசெல்வனுக்கு சாதாகமாகதான் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சிவில் வழக்கு நடந்தது தெரியும் மற்றவிவரங்கள் தெரியாது. சாட்சி பிரகாஷ் பவானி நீதிமன்றத்தில் IP (INSOLVENCY PETITION) தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். இருதரப்பினர்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. தகராறு நடந்த அன்றே போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை மறுநாள் விசாரித்தார்கள். மறுநாள் போலீசார் என்னிடம் சுமார் நான்கு கையொப்பங்கள் வாங்கினார்களா என்றால் ஆமாம். இந்த வழகது சம்பந்தமாக தகராறு நடந்ததற்கு மறுநாள் விசாரித்தார்கள் அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் முழுவதுமாக என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. நான் முதல் விசாரணையில் கூறியதுபோல் எதிரிகள் என்னை இரும்புகம்பியால் தாக்கவில்லை என்றாலும், நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், எதிரிகள் மீது இருந்த முன்விரோதம் காரணமாக நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்புகார் கொடுத்து அதன் அடிப்படையில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் தான் எதிரிகளை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.03.05 17:14:54 -0800

Judicial Magistrate No.III,

Erode.